எடுத்து வரவேண்டும் . அதேபோல் ஆற்றில் மற்ற பகுதிகளில் இருக்கின்ற இடங்களில் ஏலம் விடப்படுகிறது பஞ்சாயத்து அல்லது அங்கே இருக்கின்ற பொதுப்பணித் துறையின் சார்பாக ஏலம் விடப்படுகிறது. ஆனால் இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்குத் தெரியாமலேயே பக்கத்தில் இருக்கின்ற இடங்களில் இருந்து பர்மிட் இல்லாமலேயே எடுத்து விடுகின்ற காரணத்தால்தான் அந்த லாரிகளை நாம் இப்போது தடை செய்து, பர்மிட் இல்லாமல் எடுத்துக்கொண்டுவந்து இருப்பதற்காக நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம் ஆகவே அங்கே இருக்கின்ற லாரிகளின் உரிமையாளர்கள் தவறான வழியினை சில இடங்களில் கையாள்கிறார்கள் என்பது இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும் இன்றைக்கு மணலை வழிக்கின்ற பலயிடங்களிலே அந்த லாரிகளுடைய வேகம், மணல் வழிக்கின்றபோது தவறான இடங்களில், அரசு அனுமதி இல்லாத இடங்களில் மணலை வழித்துக் கொண்டு வருவது இதுபோன்ற நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன என்பது இங்கே இருக்கின்ற அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் நன்கு தெரியும் ஆகவே, இது போன்ற தவறுகள் செய்கின்றவர்களை ஊக்குவிக்காமல் இருக்கவேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய தலையாய கடமை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இது போன்ற தவறுகள் இல்லை என்று பர்மிட் வாங்கிக் கொண்டு யாராவது அங்கே வருகிறார்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டுக் காட்டினால் உடனடியாக இந்த அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

6. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான பொதுத் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்:—

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1992 ஏப்ரல் 21

1. இந்திய தணிக்கைத்துறை தலைவரின் 1970–71 ஆம் ஆண்டு மற்றும் 1971—72 ஆம் ஆண்டுகளுக்கான சிவில் அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த 4-வது அறிக்கை, 7-வது பேரவை மற்றும் 8-வது அறிக்கை 8-வது பேரவையின் உள் துறை குறித்து மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகள் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய 45-வது அறிக்கையை அளிக்கிறேன்

2. 1978-79 ஆம் ஆண்டுக்கான வாக்கு அளிக்கப் பெற்ற மானியங்களும் சாட்டப்பட்ட நிதி ஒதுக்கீடுகளும் மிகை செலவினங்கள பற்றிய பொதுக் கணக்குக் குழு அளித்த 26-வது அறிகககை 7-வது பேரவை மற்றும் 63 வது அறிக்கை 8-வது பேரவையில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய 46-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

7. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்.)

சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்) 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு மாண்புமிகு நிதி அமைச்சர்.

முற்பகல் 11-10

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.—

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதிஅமைச்சர்.